# கலாதீபம்

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.06.2024 | தீபம் 24


## கலாசாலையின் மின் சஞ்சிகையைப் பாராட்டுமுகமாக

# இலங்கை தேசிய வானொலியில் கலாதீபம்

## பற்றிய சிறப்பு நேர்காணல் 10.05.2024 அன்று இடம்பெற்றது




**இலங்கை வானொலியில் கலாதீபம் சஞ்சிகை பற்றிய சிறப்பு நேர்காணல்**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மாதாந்த மின்னிதழ் வெளியீட்டை கௌரவிக்கும் முகமாக இலங்கை வானொலி தமிழ் தேசிய சேவை கலாதீபம் சஞ்சிகை பற்றிய சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சி ஒன்றை அதன் பிரதம ஆசிரியர் செல்வி தர்ஷினி முத்துராஜா அவர்களுடன் 10.05.2024 அன்று நிகழ்த்தியது மூத்த ஒலிபரப்பாளர் நாகபூஷணி இந்த நேர்காணலை மேற்கொண்டார். அதன் ஒலிவடிவம் இங்கு எழுத்துருவில் தரப்படுகிறது

வணக்கம் அன்பு நேயர்களே வாசிப்புப் பழக்கம் மிகவும் அருகிவிட்டதாகக் கூறப்படும் இந்நாட்களில் சஞ்சிகை வெளியீடு நூல் வெளியீடு என்பது மிகவும் வரவேற்கத்தக்க ஒன்றாக உள்ளது.

அந்த வகையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ஊடகக்கழக வெளியீடாக கலாதீபம் மின்சஞ்சிகை விரிவுரையாளர் தர்ஷினி முத்துராஜாவை பிரதம நூல் ஆசிரியராக கொண்டு வெளிவந்துள்ளமை அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இதுபற்றய மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்வாற்காக பிரதம நூல் ஆசிரியர் செல்வி தர்ஷினி முத்துராஜா அவர்களை நாம் சந்திக்கின்றோம்

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

**01.05.2024 — 31.05.2024 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு**

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவார்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

சமயகுரவர்களுள் தலையாயவரான திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை 03.05.2024 சித்திரை சதய நட்சத்திர நாளில் வெள்ளிக்கிழமை காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உள்ள யோகலிங்கேஸ்வரர் சுவாமி கோவிலில் நடைபெற்றது

இதன்போது அதிபர் விரிவுரையாளர்கள் கற்பித்தல் சாரா உத்தியோகத்தர்கள் ஆசிரிய மாணவர்கள் இணைந்து நாவுக்கரசரின் திருமுறைப் பாடல்களை இசைத்து வழி பாடாற்றினர்.

யோகலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன விரிவுரையாளர் கு.பாலசண்முகன் நாவுக்கரசரின் சமய தொண்டுகள் பற்றி நாவுக்கரசரின் பாடல்கள் மூலம் விளக்கமளித்து உரையாற்றினார்.






கலாதீபம்
KALADEEPAM
கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு
කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.
The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College

## நமது நோக்கு

**அன்னையரைப் போற்றுவோம்**

அம்மா என்ற சொல் உலகில் வழக்கில் உள்ள பல்வேறு சொற்களுக்கிடையில் உயர்வான ஒன்று. தமிழர் வாழ்வியலின் உன்னதமான சொல். மானுடர்களுக்கு மட்டுமின்றி உலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளு க்கும் உவப்பான சொல்.

தமிழரின் வாழ்வியல் தாயைச் சார்ந்தே அமைந்தது என்பதற்கு சான்றாக பின்வரும் பாடலை கூறலாம்.

**ஒற்றைக் குடும்பம் தனிலே பொருள்**
**ஓங்க உழைப்பவன் - தந்தை**
**மற்ற கருமங்கள் செய்து மனை**
**வாழவைப்பாள் அன்னை**

தந்தை கொண்டு வரும் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு முழுக் குடும்பத்தின் பொறுப்புக்களைச் சுமந்து சிறந்த பொருளியலாளராக மிளிர்வது தாய்தான். எனவே பண்டைய சமூகப் பொருளாதாரம் பற்றிய சிந்தனைகள் பெண்களை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன. பிள்ளைகளை பெற்றால் தான் அன்னை என்று இல்லை தாய்மை உணர்வு மிக்கோர் தாயரே

தாயிடம் இருந்தே சிறப்பான ஒழுக்கம் மக்களுக்கு பயிற்றுவிக்கப்படுகின்றது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என பகர்வார் ஔவையார்.

எங்கே அன்னை போற்றப்படுகின்றாளோ அங்கே நல்ல சிந்தனைகளும், விழுமியங்களும் கட்டிஎழுப் பப்படுகின்றன.

இல்வாழ்க்கையின் அடிப்படை தாய், முதியோர் இல்லங்களில் பெற்றோரை சென்று பார்வையிட வசதியாக ஒரு ஞாயிற்றுக்கிழமையை ஒதுக்கி அன்னையர் தினம் கொண்டாடும் வழக்கம் மேலைத்தேயத்தில் உருவானது. முகபுத்தகங்களின் வாயிலாக அது நம்மவர் மத்தியில் செல்வாக்குப் பெற்றது. ஆனால் உண்மையில் அன்னையர் தினம் இதுவா?

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அவர்களும் தாய் என்கிற வகிபாகத்தை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்கள். மாற்றுப் பெற்றோராக கொள்ளப்படுபவர்கள். அன்னையாக மிளிரும் ஆசிரியர்களையும் இவ் அன்னையர் தினத்தில் போற்றுவோம்.

**எமது பண்பாட்டைப் பொறுத்தவரையில் எல்லா நாள் களும் எமக்கு அன்னையர் தினமே**

# இருபாலை கற்பகவிநாயகர் மகோற்சவம் 21.05.2024 பக்திபூர்வமாக இடம்பெற்றது

தென்கோவை திருவருள்மிகு கற்பகப் பிள்ளையார் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடரந்து 16 நாள்கள் இடம்பெறவுள்ளது. இதில் 21.05.2024 செவ்வாய்க்கிழமை (மூன்றாம் திருவிழா) பகல் ஆசிரிய கலாசாலையின் உபயமாக இடம்பெறும் திருவிழா ஆகும்.

கலாசாலை உபயத்திற்கான மகோற்சவப் பத்திரிகை ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ பா. செல்வசேனக்குருக்கள் அவர்களால் கலாசாலை முதல்வர் ச.லலீசன் நிர்வாகத்திற்கான பிரதி முதல்வர் க. செந்தில்குமரன் இந்துமன்றகக் காப்பாளர் விரிவுரையாளர் கு. பாலஷண்முகன் ஆகியோரிடம் (07.05.2024) கையளிக்கப்பட்டது. இந்த மகோற்சவத்தில் கலாசாலை சமூகத்தினர் கலந்துகொண்டு பக்தி பூர்வமாக வழிபாடாற்றினர்.









# News in Brief - Month of May

**03.05.2024**
**Kurupoja of Thirunavukarasu Nayanar** was held on 03.05.2024 on Friday morning at Yogalingeswarar Swamy Temple at Kopay Teachers' College.

**08.05.2024**
**World Red Cross Day** - a special Assembly was held at Kopay Teachers' College in honor of it.
Sri Lanka Red Cross District President Mr ShankaraPillai Tiraviyarasa was the special guest.
The event chaired by Science Course Teacher Trainee Mrs Thavarasa Rirta, Mathematics Course Teacher Trainee Mr Chandrakumar Selvaratnam gave a speech on the history of the Red Cross.

**10.05.2024**
**Special Interview about Kaladeepam** Magazine was held over the Sri Lanka Broadcasting Corporation National Service (SLBC) Interview was held on 10.05.2024 Friday at 7.30 pm. The Famous Broadcaster Mrs Nagapoosani interviewed the Kaladeepam e-magazine's Chief Editor Ms Dharshini Muthurajah.

**15.05.2024**
**A Mother's Day** gathering was held on Wednesday morning at 8.30am at Kopay Teachers' College.
The event was headed by physical education teacher trainee
Mrs Vimalraj Ushananthini. Senior Writer and Former ADE of Science Mrs Kokila Mahendran was the special guest and delivered a talk on Mother as a Teacher.

**22.05.2024**
**Cultural Diversity Day -** A special Assembly to emphasize Cultural Diversity was held on Wednesday morning at Kopay Teachers' College Rathilakshmi hall. Mrs Jayantakumar Sulosanadevi, a Teacher Trainee of Primary Education, moderated the event, R. Rajeskannan, Senior Lecturer, Jaffna University Department of Sociology participated as the keynote speaker of the event.

**29.05.2024**
The Wednesday assembly was held under the leadership of the Principal. Mrs. Gokulakannan Mythili, Teacher Trainee of Primary Education moderated the event. Mrs. Asmita Begum, a Teacher Trainee of Special Education, delivered an awareness speech to highlight the Anti - Tobacco Day in this event. After that Mr Vethanayakam Tabendran, a retired social service officer and book publisher, gave a keynote speech on the theme of Strategies for successful book publishing.

# 10.05.2024 வெள்ளி இரவு 7.30 மணிக்கு தமிழ் தேசிய சேவையில் கலாதீபம் மின்இதழ் பற்றி ஒளிபரப்பான நிகழ்ச்சி

**ஒலி வடிவத்திலிருந்து எழுத்துரு ~ செல்வி தி.பெலினி (ஆசிரிய மாணவி 2023/2024 விஞ்ஞானநெறி)**

**வணக்கம் விரிவுரையாளர் தர்ஷினி முத்துராஜா அவர்களே கலாதீபம் சஞ்சிகை எப்போது என்ன நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டது?**

வணக்கம். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 100 ஆண்டு கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டது இது ஆசிரியர்களை சமூகத்திற்கு உருவாக்கி வழங்குகின்ற நிறுவனம். பெஞ்சமின் புளுமின் பகுப்பாய்வின் படி New Taxonomy அதாவது புதிய ப்ளுமின் பகுப்பாய்வின்படி ஒருவரது உச்சபட்ச திறனாக அமைந்தது ஆக்கத் திறனாகும் இதனை Creativity என ஆங்கிலத்தில் அழைக்கலாம். ஆக்கத்திறன் மிக்க மாணவர் சமூகத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரி யர்களிடமே உள்ளது. எழுத்தாக்கத் திறனை கட்டி எழுப்ப வல்ல செயற்பாடுகளில் சஞ்சிகை வெளியீடும் ஒன்றாகும். அதற்கு வழிகாட்டும் முகமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2020.10.01 அன்று கலாதீபம் சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டது. கத்தியின்றி ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகிறது. என்று பாரதி சொன்னது போல ஒற்றை இன்றி அச்சுமை இன்றி சஞ்சிகை என்று வெளி வரக்கூடிய சூழ்நிலை இலத்திரனியல் யுகத்தில் ஏற்பட்டுள்ளது. Electronic சஞ்சிகையாக மின் சஞ்சிகையாக அதாவது e-paper ஆக வெளியிடப்பட்டு வருகிறது.

**2020 அளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்த சஞ்சிகை தொடர்ந்தும் எந்த இடையூறும் இன்றி முன்னெடுத்துச் செல்ல முடிகிறதா?**

**கேட்டிலும் உண்டு ஓர் உறுதி** என்பது வள்ளுவ னுடைய வாக்கு அதாவது எந்த தீமை க்குள்ளும் ஒரு நன்மை உண்டு என்பது இதனுடைய பொருள். 2020ல் கலாதீபம் வெளிவருவதற்கு பிரதான காரணம் கோவிட் நெருக்கடியே. ஆசிரிய மாணவர்கள் வீடுகளில் இருந்தவாறு இணைய வழியில் நிகழ்நிலையில் பாடங்களை கற்றனர். அவர்களுடைய ஆக்கத்திறனை வளர்க்க வேண்டும் என்பதற்காக யாழ்ப்பாணம் தேசிய கல்வியில் கல்லூரியின் அப்போதைய பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தம் **குருதீபம்** என்ற மின் சஞ்சிகைகையை ஆரம்பித்தார். அதன்படி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் அப்போதைய அதிபர் திரு வீரகத்தி கருணைலிங்கம், பிரதி அதிபராக சந்திரமௌலீசன் லலீசன் ஆகியோரது முயற்சியால் திரு லலீசன் அவர்களை பிரதம ஆசிரியராகக் கொண்டு கலாதீபம் மின் சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி அதன் வடிவமைப்பில் பெரும்பான்மையை திரு லலீசன் அவர்களும், அப்போது ஆசிரியர் மாணவனாக இருந்த திரு இளங்கீரன் அவர்களும் மேற்கொண்டிருந்தனர். 2020 தொடக்கம் 2022 இன் இறுதிவரை ஆறு மின் சஞ்சிகைகளை அவர்களால் வெளிக்கொணர முடிந்தது. கோவிட் நெருக்கடிக்கு அப்பால் ஆக்கங்களை பெறுதல், தொகுத்தல் என்பவற்றில் எதிர்கொண்ட மேலதிக நேரம், அர்ப்பணிப்பு இதற்கு காரணமாக இருந்திருக்கலாம். இந்த பணிகளுக்கு மனத் திருப்தி ஒன்றே வெகுமதியாக கிடைக்கும். மேலதிக கொடுப்பனவு எதுவும் கிடையாது. இருப்பினும் 2023 ஜனவரி தொடக்கம் கலாசாலை நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்து இதுவரை மாதத்தில் முதல் திகதியில் தவறாது இந்த மின் சஞ்சிகை வெளிவருகிறது.

**சஞ்சிகை சிறப்பாக வெளிவருவதற்கு துணை நிற்பவர்கள் பற்றி...**

2023 கலாசாலை அதிபராக பொறுப்பேற்ற திரு லலீசன் அவர்கள் சஞ்சிகை வெளியீடு தொடர்பான பூரண அறிவை கொண்டவர். அவர் சஞ்சிகை தொடர்பான புதிய குழுவை அமைத்தார்.

பிரதம ஆசிரியராக 2023.01.01 இலிருந்து செயல்படும் படியாக செல்வி தர்ஷினி முத்துராஜா ஆகிய என்னை நியமித்தார். தற்போது வெளிவருகின்ற சஞ்சிகையின் பிரதான வடிவமைப்பினையும்(Digital Designing) தர்ஷினி முத்துராஜா அவர்களிடமே ஒப்படைத்தார்.

அத்துடன் பிரதி அதிபர்களான க.செந்தில்குமரன் த.கோபாலகிருஷ்ணன் உபஅதிபரான திருமதி சத்யா ரஞ்சித், விரிவுரையாளர்களான ப.மாலதி, வே நந்தகுமார், அ.சுஜீவா மற்றும் கல்விசாரா உத்தியோகத்தரான செ.கஜந்தன் ஆசிரியர் மாண வர்களான த.இன்பதாஸ், இ.செந்துர்செல்வன், மு.கஜேந்திரன், தி.பெலினி ஆகியோரும் வளவாளர் களாக இணைந்து கொண்டனர்.

மிகக் குறிப்பாக ஆசிரிய மாணவர்களை உள்ள டக்கியதாக இக்குழுவை அமைத்துள்ளமை மாண வர்களுக்கு பத்திரிகைத் துறைசார்ந்த அனுபவங்க ளைப் பெற்றுக் கொடுப்பதாக அமைந்துள்ளது. அதிபர் மின் சஞ்சிகையின் இயங்கு நிலைமையை தொடர்ச்சியாக கண்காணித்து வருவார். இதனால் சஞ்சிகை தொடர்ச்சியாக வெளிவரக் கூடியதாக உள்ளது.

**சஞ்சிகையின் பிரதான உள்ளடக்கமாக அமைந்திருப்பது என்ன ?**

பிரதானமாக கலாசாலையின் முன்னைய மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள், நிகழ்வுகள் அதனுடைய பதிவுகள், ஆக்கங்கள் என்பது இடம்பெறும். அத்துடன் ஆசிரிய மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள், கலாசாலையில் கற்றுவெளியேறிய பழைய மாணவர்களின் ஆக்கங்கள் குறிப்பாக கவிதை, கட்டுரை, கற்பித்தல் சார்ந்த அனுபவங்கள் என்பவற்றை ஆக்கங்களாக எழுதி வருகின்றனர். அவற்றை மையமாகக் கொண்டு இம்மின்னிதழானது வெளிவருகின்றது.

**இம்மாத சஞ்சிகை என்னென்ன சிறப்பு அம்சங்களை கொண்டுள்ளது ?**

இச் சஞ்சிகை இணையம் வாயிலாக வெளியிடப்படும் வேளையில் பல்லாயிரக் கணக்கானோருக்கு சென்றடைகிறது. குறிப்பாக கற்று வெளியேறிய ஆசிரியர்களாக இருப்பவர்கள் தங்கள் பாடசாலை குடும்பத்துடன் இச் சஞ்சிகையினை பகிர்ந்து கொள்கின்றனர். காலம் கடந்தும் இது நிலைபெற வேண்டும் என்பதற்காக அத்தனை சஞ்சிகைகளும் நூலகம் என்ற இணையத்தளத்தில் ஆவணப்படுத்தி உள்ளோம்.

இலங்கையில் இருந்து வெளிவந்த ஒரு லட்சத்துக்கும் மேலான தமிழ் நூல்கள் **noolagam.org** என்ற இணையதளத்தில் தரவிறக்கப்பட்டுள்ளதை பலரும் அறிந்திருப்பர் என நினைக்கின்றேன்.

இதனை விட கல்வி அமைச்சிலுள்ள உயர் அதிகாரிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எனப்பலர் சஞ்சிகையை பார்வையிடுகின்றனர், பாராட்டுகின்றனர்.

**எதிர்வரும் காலங்களில் கலாதீபம் பெறப்போகும் புதிய பரிமாணம் என்ன?**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஒரு காலத்தில் இலங்கையின் தலை சிறந்த கல்வி கூடமாக விளங்கிய நிறுவனம் ஆகும்.

சங்கீத வித்துவான் வீரமணிஐயர், கலாநிதி காரை சுந்தரம் பிள்ளை, கலாகீர்த்தி திருமதி சாந்தினி சிவனேசன் வித்துவான் சொக்கன், பண்டிதமணி கணபதிப் பிள்ளை, பண்டிதர் செ.திருநாவுக்கரசு போன்ற பலர் கலாசாலையின் அடையாளங்கள் ஆவார்.

இவர்களை முதன்மைப்படுத்தி இன்றைய ஆசிரிய சமூகத்திற்கு ஆவணப்படுத்தும் வகையில் ஆளுமைச் சிறப்பு இதழ்களை வெளியிட எண்ணியுள்ளது.

**சஞ்சிகை தொடர்பான ஒரு சிறப்பு தகவல்கள்**

கலாதீபம் சஞ்சிகையின் பெரும்பங்கு தமிழிலும் சிறிய பகுதி ஆங்கிலத்திலும் உள்ளடக்கங்களை கொண்டுள்ளது.

அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் பாடசாலை சமூகத்தினர் இத்தகைய முயற்சியில் ஈடுபட முடியும் தற்போதுள்ள தொழில்நுட்ப வளங்கள் இதற்கு உதவி செய்யும்.

இலங்கை வானொலி எம்மை அங்கீகரித்து இத்தகைய ஒரு நேர்காணலை இடம்பெறச் செய்தமை கூட நமக்கான ஒரு ஊக்குவிப்பாகவே அமைகின்றது. கவிஞர் வாலியின் வரிகளோடு இதை நான் நிறைவு செய்ய விரும்புகின்றேன் ஊக்குவிப்பவர் இருந்தால் ஊக்குவிற்பவரும் தேக்குவிப்பார்.

## கற்பித்தல் பயிற்சியின் ஆரம்ப முன்னோடி வேலைத்திட்டம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கற்கைநெறியினை மேற்கொண்டிருக்கும் 2022/2023, 2023/2024 கற்கை நெறியினருக்கான கற்பித்தல் பயிற்சி முன்னாயத்த செயற்பாடுகள் யூன் மாத முற்பகுதியில் இடம்பெறவுள்ளதாக கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிஅதிபர் த.கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அதற்கான வேலைத்திட்டம் தயாரித்தல் மற்றும் மாதிரிக் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் ஆரம்பக்கல்விநெறியினர் மற்றும் இரண்டாம்நிலை பாடத்துறைசார் பாடநெறியினருக்காக தனித்தனியான தினங்களில் இச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் அதற்கான அறிவுறுத்தல்கள் ஆசிரிய மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதிஅதிபரவர்கள் தெரிவித்தார்.

# உலக செஞ்சிலுவை தினத்தையொட்டி சிறப்பு ஒன்றுகூடல் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மாவட்டத்தலைவர் திரு சங்கரப்பிள்ளை திரவியராசா அவர்கள் கலந்து சிறப்பித்தார்

உலக செஞ்சிலுவை தினமாகிய 08.05.2024 அன்று அதனை கௌரவிக்கும் வகையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சிறப்பு ஒன்றுகூடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மாவட்ட தலைவர் சங்கரப் பிள்ளை திரவியராசா சிறப்பு அதிதியாக கலந்துகொண்டார்.

விஞ்ஞானத்துறை ஆசிரியமாணவி தவராசா கிற்றாவுடைய தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கணிதத்துறை ஆசிரிய மாணவன் சந்திரகுமார் செல்வரட்ணம் செஞ்சிலுவைச் சங்க வரலாற்றுப் பார்வையை உரையாக வழங்கினார்.

அதிதிக்கான கௌரவிப்பு முகாமைத்துவ குழுவினரால் வழங்கப்பட்டது. தொடர்ந்து அதிதியாகக் கலந்துகொண்ட சங்கரப்பிள்ளை திரவியராசா அவர்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்.

கணித விஞ்ஞான ஆசிரிய மாணவர்கள் இணைந்து செஞ்சிலுவைச்சங்கம் பற்றிய விழிப்புணர்வு காணொளிப் படம் ஆவணப்படுத்தப்பட்டது. அதிபர் ச.லலீசன் நிறை வுரை ஆற்றினார்.

நிறைவுரையில் கருத்துத் தெரிவித்த அவர் 88/89 ஆண்டு காலப்பகுதியில் பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இருந்து தொண்டு செய்யும் உள்ளத்துடன் செஞ்சிலுவைச்சங்கத்தில் இணைந்து இன்று செஞ்சிலுவைச்சங்க தலைவராக உயர்ந்த திரு. சங்கரப்பிள்ளை திரவியராசாவை கௌரவிப்பதில் மகிழ்வடை வதாக தெரிவித்தார்.

அதிதிக்கான அறிமுக உரையை விரிவுரையாளர் jதிரு வேல்நந்தன் அவர்கள் வழங்கினார்.















# கலாசாலையில் அன்னையர்தின சிறப்பு நிகழ்வு
# சிறப்பு விருந்தினராக திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

அன்னையர் தினத்தைச் சிறப்பிக்கும் ஒன்றுகூடல் 15.05.2024 புதன்கிழமை காலை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெற்றது.
உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி விமல்ராஜ் உஷாநந்தினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மூத்த எழுத்தாளரும் உளவளத் துணையாள ருமாகிய கோகிலா மகேந்திரன் கலந்து கொண்டு அன்னையாக ஆசிரியர் என்ற பொருளில் உரையாற்றினார்.
நிகழ்வில் அன்னையர் தினம் குறித்த ஆசிரிய மாணவர் உரையை றோமன் கத்தோலிக்க நெறியைச் சேர்ந்த கமலினி சுதாகர் ஆற்றினார்.
அதிதி அறிமுகவுரையை விரிவுரையாளர் வே.சேந்தன் நிகழ்த்தினார். கலாசாலையின் றோமன் கத்தோலி க்கம், உடற்கல்வி, விசேட கல்வி ஆங்கிலம் ஆகிய நெறிகளைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் இணைந்து உருவாக்கிய அன்னையர் தினம் பற்றிய ஆவணப் படமும் திரையிடப்பட்டது.
கலாசாலை அதிபர் ச.லலீசன் நிறைவுரை யாற்றினார். கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்ட கோகிலா மகேந்திரன் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.













# பண்பாட்டு பன்மைத்துவத்தை வலியுறுத்தும் சிறப்பு ஒன்றுகூடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திரு இ.இராஜேஸ்கண்ணன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

பண்பாட்டு பன்மைதுவத்தை (Cultural Diversity) வலியுறுத்தும் வகையில் அமைந்த சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வு 22.5.2024 புதன்கிழமை காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது

ஆரம்பகல்வி பயிற்சிநெறி ஆசிரிய மாணவி ஜெயந்தகுமார் சுலோசனாதேவி தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன் சிறப்புரை ஆற்றினார்.

ஆசிரிய மாணவர்களான சி.யனிஸ்டன், இ.தேவ மணி ஆகியோரும் ஆசிரிய மாணவர்கள் சார்பில் உரையாற்றினர்.

கலாசாலை அதிபர் ச. லலீசன் நிறைவுரை ஆற்றினார். விரிவுரையாளர் வேல்.நந்தகுமார் சிறப்புரையாளருக்கான அறிமுகவுரையை ஆற்றி னார்

இலங்கையில் பண்பாட்டு பன்மைதுவத்தை குறிக்கும் வகையில் ஆரம்ப கல்வி ஆசிரிய பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட காணொலியும் வெளியிடப்பட்டது. சிறப்புரையாற்றிய இ. இராஜேஸ்கண்ணன் தான் எழுதிய ஒரு தொகுதி நூல்களை கலாசாலை நூலகத்திற்குக் கையளித்தார்.















# வெற்றிகரமாக நூல் ஒன்றை வெளியிடுவது எப்படி
# ஓய்வுநிலை சமூகசேவை உத்தியோகத்தரும் புத்தக வெளியீட்டாளருமாகிய திரு வேதநாயகம் தபேந்திரன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்

கலாசாலையின் புதன் ஒன்றுகூடல் (அசெம்பிளி) 29.05.2024 காலை ஆரம்பக் கல்வி நெறி ஆசிரிய மாணவி திருமதி கோகுலக்கண்ணன் மைதிலி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் புகையிலை ஒழிப்பு தினத்தை சிறப்பிக்கும் முகமாக விழிப்புணர்வு உரையை விசேட கல்வி நெறி ஆசிரிய மாணவி திருமதி அஸ்மிதா பேகம் ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து ஆசிரியர்கள் வெற்றிகரமாக புத்தக வெளியீடு செய்வதற்கான உத்திகள் என்ற தொனிப்பொருளில் ஓய்வு நிலை சமூக சேவை உத்தியோகத்தரும் புத்தக வெளியீட்டாளருமாகிய வேதநாயகம் தபேந்திரன் சிறப்புரை ஆற்றினார்.

இவருக்கான அறிமுக உரையை கலாசாலை விரிவுரையாளர் த.தவசேகர் ஆற்றினார். தொடர்ந்து நிறைவுரை ஆற்றிய அதிபர் இலங்கையில் வெளிவந்த புத்தகங்களில் 75% புத்தகங்கள் ஆசிரியர்களாலேயே வெளியிடப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டதுடன் நூல் வெளியிடும் பழக்கத்தை பயிற்சிக்காலத்தில் ஆசிரிய மாணவர்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

புகையிலை ஒழிப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்ட காணொளி ஆசிரிய மாணவர்களால் வெளியிடப்பட்டது.

நிறைவாக ஆசிரிய மாணவர்கள் எதிர்கொள்ள உள்ள கற்பித்தல் பயிற்சி தொடர்பான அறிவுறுத்தல்களை கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதி அதிபர் த. கோபாலகிருஷ்ணன் வழங்கினார்













# முன்மாதிரியான அசெம்பிளி கலாசாலையில் நடைபெறுகிறது புதன்கிழமை ஒன்றுகூடல் பற்றிய அதிதி ஒருவரின் கண்ணோட்டம்



**வேதநாயகம் தபேந்திரன்**
ஓய்வு நிலை சமூக சேவை உத்தியோகத்தரும் புத்தக வெளியீட்டாளரும்

இன்று 29- 05- 2024 புதன்கிழமை காலையில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்டேன். புத்தகம் ஒன்றை வெற்றிகரமாக வெளியிடுவது எப்படி என்ற தலைப்பில் அரை மணி நேரம் உரையாற்றினேன்.

இதற்குரிய அழைப்பையும் வாய்ப்பையும் தந்த எனது நண்பரும் கல்லூரியின் அதிபருமான செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் அவர்கட்கும் விரிவுரையாளர் குழாத்திற்கும் கோடி நன்றி.

இன்றைய நிகழ்வில் நான் கண்டு கொண்ட முன்மாதிரியான அம்சங்களை நிச்சயமாகப் பாராட்டத்தான் வேண்டும்.

01. நேரமுகாமைத்துவம். சரியாக 8.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. காலை 9.45 மணிக்குச் சரியாக நிறைவு பெற்றது.

இத்தனைக்கும் சிறியதும் நடுத்தரமானதுமான 06 உரைகள் இடம் பெற்றன.

02. விரிவுரையாளர்கள் மாணவர்களது உடை அமைப்பு. ஆண்கள் யாவரும் நேர்த்தியான உடை அணிந்து ரை அதாவது கழுத்துப்பட்டி கட்டியிருந்தார்கள்.

பெண்கள் அனைவரும் சேலை அணிந்திருந்தார்கள். குறிப்பாக சாறி பிளவுசை கண்ணியமான வடிவத்தில் அணிந்திருந்தார்கள்.

இதற்காக வழிநடத்தும் அதிபருக்கும் , விரிவுரையாளர்களுக்கும் ஒத்துழைக்கும் யாவருக்கும் பாராட்டுகள்.

03. மண்டப ஒழுங்கமைப்பு மிகவும் நேர்த்தியானது. ஸ்மார்ட் வகுப்பறை ஸ்கிறீன்-கணனித்திரை,புகைப்படக் கருவிகள், வீடியோ,கமெரா ஒலி அமைப்பு ஆகியவை மிகவும் நேர்த்தியாக அமையப் பெற்றன.

அவற்றைக் கையாளத் திறமை மிகு மாணவர்கள் இருந்தார்கள்.

அது மட்டுமல்ல நிகழ்வு நடைபெற்று ஓரிரு மணித் துளிகளிலேயே அவை சமூக வலைத் தளங்களில் ஒன்றான Youtube -யுரியூப்பில் வெளியானது.

ஆனால் எனது உரையில் தொழிநுட்பக் கோளாறு காரணமாக விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணா உரையாற்றியதாக இடம் பெற்று விட்டது. இதனை தொகுத்தவர் இனிமேல் கவனம் எடுப்பது நன்று.

04.இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய ஆசிரிய மாணவி மிகவும் சொற் சிக்கனமாக நேர்த்தியாக உரையாற்றினார். நிகழ்வை வழிநடத்தினார். இணைப்பைச் சரியான முறையில் ஏற்படுத்தினார்.

05. உரையாற்றியவர்களில் என்னைத் தவிர யாவரும் காகிதத் துண்டில் எழுதி வந்து வாசிக்கவில்லை. விடயத்தைக் கிரகித்து வைத்துச் சிறப்பாக உரையாற்றினார்.

கல்லூரி முதல்வர் ச.லலீசனது வழிநடத்தலில் தான் இவ்வாறு நடைபெறுவதாக அறிந்தேன். பாராட்டுக்கள். இதன் மூலமாக பேச்சாளர்கள் விடயத்தைக் கிரகித்து சபையை நேரடியாகப் பார்த்துப் பேசும் திறனை வளர்ப்பார்கள்.

பேச்சு ஒன்றை மேற்கொள்ளும் போது உடல்மொழி முக்கியமானது. குறிப்பாகப் பேசுபவருக்கும் கேட்பவருக்கும் கண்தொடர்பு முக்கியமானது.

அதனைப் பேசியவர்கள் மிகவும் சிறப்பாகக் கடைப்பிடித்தார்கள்.

06. இறைவணக்கம் புதுமையானதாக இருந்தது. நாட்டின் 04 சமயத்தைப் பின்பற்றுபவர்களும் உள்ளார்கள்.

நான்குக்கும் தனித்தனியாகச் செய்ய முடியாது. அதனால் சமயம் கடந்த ஞானி திருவள்ளுவரின் முதலாவது குறளாகிய அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு எனும் குறளுடன் இணைந்ததான ஒரு பாடல் பாடப்பெற்றது.

முஸ்லீம் ஆசிரிய மாணவி ஒருவரும் இணைந்து பாடியது சிறப்பானதாக இருந்தது.

07.மே 31 ஆம் திகதி சர்வதேச புகையிலை மறுப்புத் தினம் வருகிறது. அதனையொட்டி விழிப்புணர்வாக மாணவி ஒருவரின் மிகவும் சிறப்பான பேச்சு இடம் பெற்றது.

கையில் பேப்பர் துண்டு இல்லாமலேயே மிகவும் சிறப்பாகச் செய்தார். அடியேன் அதிதிப் பேச்சாளர் ஆகையால் அல்லது தெரியாமல் சென்றதால் விதி விலக்கு போலும்.

08. மாணவர் ஒருவர் தயாரித்த சர்வதேச புகையிலை மறுப்புத் தினக் காணொளி 10 நிமிடங்கள் வரையில் அகன்ற திரையில் இடம் பெற்றது. கண்ணையும் கருத்தையும் கவரக் கூடிய விதத்தில் காணொளியை வர்ணமயமானதாக மிகவும் சிறப்பாகத் தயாரித்து இருந்தார்.

09. அதிதியாகிய என்னை அறிமுகம் செய்து விரிவுரையாளரும் அரச பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகளின் வளவாளருமாகிய நண்பர் தவசேகர் அறிமுக உரையாற்றினார். பல விடயங்களைத் தேடித் தொகுத்து அறிமுகம் செய்தார். மனனம் செய்து தனது உடல்மொழியைச் சிறப்பாக வெளிப்படுத்தினார்.

10. எனது அதிதி உரை 28 நிமிடங்கள் இடம் பெற்றது. அரைமணி நேரம் அதாவது 30 நிமிடங்களெனத் தந்திருந்தார்கள். அதற்கு அண்மித்துத் திட்டமிட்டு உரையாற்றினேன்.

அவையில் இருந்தோர் மிகவும் அமைதியாகக் கேட்டு சிறப்பான ஒத்துழைப்பைத் தந்தார்கள்.

கல்விசார் நிறுவனங்களும் அரச தனியார் நிறுவனங்களும் இதனைக் கடைப்பிடிப்பது நன்று.

11. பல்சுவை அம்சமும் உள்ளதாகச் சற்றும் சலிப்புத் தட்டாத ஒரு கலவை நிகழ்வு.

பாராட்டுதற்குரியது.கல்லூரி முதல்வர் ச.லலீசன் இறுதியாக நிறைவுரையை நன்றியுரையை மிகவும் சுருக்கமாகவும் சொல்நயம் உள்ளதாகவும் ஆற்றினார்.

ஏனைய கல்லூரிகளில் முதல்வர் தம்மை ஒரு முதன்மைப் பிரதிநிதியாகவே இனம் காட்டுவது அதிகம். ஆனால் நண்பர் ச.லலீசன் ஏனையோருக்கு வாய்ப்புக் கொடுத்து விட்டு அடக்கமாக இருந்தமை முன்மாதிரியானது.

நிறைவின் பின்னர் கல்லூரி நிர்வாகம் தொடர்பான தகவல்களைப் பிரதி அதிபர் மிகவும் சுருக்கமாக நிகழ்த்தினார்.

மொத்தத்தில் சிறப்பான ஏனையோருக்கு முன்மாதிரியான நிகழ்வைப் பிற கல்வச் சமூகங்கள் தனித்துவமானதாகக் கொண்டாட கொண்டாட வேண்டும்.

எனக்கு வாய்ப்பளித்துக் கௌரவித்தமைக்கும் கோடி நன்றி.

**வேதநாயகம் தபேந்திரன்**
**2024 மே 29**

# கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி
திருமதி.விமல்ராஜ் உஷாநந்தினி
அன்புத்தாயார்

**சிவகுமாரன்**
**இராஜேஸ்வரி**

(வாகையடி வீதி , மட்டுவில் தெற்கு , சாவகச்சேரி)

தோற்றம் 13.04.1965
மறைவு 21.05.2024

அவர்களின் பிரிவு குறித்து எமது ஆழ்நத அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் , அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப்பிரார்த்திக்கிறோம்.

கலாசாலை சமூகம்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

# சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறை தினம் 2024



செல்வரட்ணம் சந்திரகுமார்
கணிதநெறி ஆசிரிய மாணவன்
(2023/2024)

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 08 ஆம் திகதி சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறை தினம் உலகலாவிய ரீதியில் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது அந்த வகையில் இன்றை தினத்தை முன்னிட்டு எமது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் அத்தினமானது அனுட்டிக்கப்படுவது பெருமைக்குரிய விடயமாகும்.

**காலத்தினால் செய்த உதவி சிறிதாயினும் ஞாலத்திலும் பெரிதாக போற்றப்பட வேண்டும்** என்பது வள்ளுவர் பெருந்தகையின் வாக்காகும். அதற்கமைய மனித குலத்திற்கு தேவையான உதவியை தேவையான இடத்தில் தேவையான போது தேவையறிந்து செய்ய வேண்டும். அந்த வகையில் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் செயற்படுகின்ற போதிலும் அதில் முதன்மையான தொண்டு நிறுவனம் என்றால் அது சர்வதேச செஞ்சிலுவை சங்கமே அன்றி வேறு எதனையும் கூறமுடியாது.

## தோற்றம்

சர்வதேச செஞ்சிலுவை சங்கமானது எவ்வாறு தோற்றம் பெற்றது என நோக்குவோம் சுவிஸ்லாந்து நாட்டின் ஜெனிவாவைச் சேர்ந்த கென்றி டுனான்ட் என்பவர் Y,M,C,A எனும் அமைப்பினை ஆரம்பித்து. அதனூடாக பண்ணை விவசாயத்தினை மேற்கொண்ட போது அதற்கான நீரைப் பெற்றுக்கொள்ள பிரான்ஸ் நாட்டிடம் அனுமதி பெறவேண்டி இருந்தமையினால் அதற்கான அனுமதியினைப் பெற்றக்கொள்ளும் நேக்கில் பிரான்ஸ் நாட்டு மன்னான 3ம் நெப்போலியனிடம் அனுமதி பெற வேண்டியிருந்தது அப்போது அனுமதிக்காக பலமுறை சென்றும் அனுமதி பெறமுடியாத நிலை காணப்பட்டது. அரச அதிகாரிகளுக்கு பணம் கொடுத்து அனுமதியினை பெறுவதற்காக சென்று கொண்டிருந்த போது அன்றைய தினம் இத்தாலியின் ஒரு பகுதியினை அஸ்தியப்படைகள் கைப்பற்றியிருந்தது. இத்தாலிக்காக பிரான்சியப் படைகள் சண்டையிட்டுக் கொண்டிருந்த ஒரு நாள் 1859 ஆம் ஆண்டு அந்த நாளில் டுனான்ட் கண்ட காட்சியே செஞ்சிலுவை சங்கத்தினை ஆரம்பிக்கத் தூண்டியது அதாவது அன்றைய தினம் பல்லாயிரக்கணக்கான போர் வீரர்கள் இறந்தும் காயப்பட்டும் கிடப்பதைக் கண்டு காயப்பட்ட வீரார்களுக்கு உதவி செய்யும் நோக்கில் மக்களின் உதவியுடனும் தன்னுடைய விடாமுயற்சியினாலும 500 இற்கு மேற்பட்ட போர் வீரர்களுக்கு முதலுதவி செய்து 400 இற்கு மேற்பட்ட போர்வீரர்களை காப்பற்றினார். அதனடிப்படையிலே 1863 ஆம் ஆண்டில் செஞ்சிலுவைச் சங்கத்தினை ஆரம்பித்தார். ஆதன் பின்னர் ஐரோப்பிய நாடுகளுக்கு 1864 ஆம் ஆண்டு சுற்றுப் பயணம் செய்து நிதியினை சேகரித்து சங்கத்தினை நடாத்திவந்தார்

எனினும் 1948 ஆம் ஆண்டு டுனான்ட் அவர்களின் பிறந்த தினத்தினையே சர்வதேச செஞ்சிலுவை தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. இன்றுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தினமானது 76 ஆண்டிடுகளைக் கடந்து சிறந்த முறையில் பயணத்துக் கொண்டிருக்கின்றது. அதற்கு காரணம் அச்சங்கத்தின் ஏழு வகைக் கோட்பாடுகள் ஆகும்.

## கோட்பாடுகள்

மனிதாபிமானம்
பாரபட்சமின்மை
சுதந்திரத்தன்மை
நடுநிலமை
தொண்டுபுரிதல்
சர்வவியாபகத்தன்மை
ஒற்றுமை என்பனவாகும்.

## கொடியமைப்பு

இச்சங்கத்தின் கொடியமைப்பானது ஐரோப்பியா, ஆசியா போன்ற நாடுகளில் வெள்ளை நிறப் பரப்பிற்குள் சிவப்பு நிற சிலுவை அமைப்பும் மத்திய கிழக்கு மற்றும் இஸ்லாமிய நாடுகளில் செம்பிறையினைக் கொண்டதான கொடியமைப்பும் காணப்படுகின்றது, இது சுவிஸ்சிலாந்து நாட்டுக் தேசியக் கொடியினை ஒத்ததாக அமைந்துள்ளது. அத்துடன் இச்சின்னத்தை அனுமதி பெற்றவர்கள் மாத்திரமே பயன்படுத்த முடியும். வேறு யாரும் பயன்படுத்தினால் தண்டனைக்கரிய குற்றமாகும்.

## இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமானது J.V.P கலவரத்தின் போதே முதன் முறையான 1989ஆம் ஆண்டு காயப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக வருகைதந்தது. அதன் பின்னர் இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கிடையில் போர் நடைபெற்ற காலத்திலும் சுனாமிப் பேரலை அனர்த்தத்தின் போதும் தமது சேவையினை இலங்கையில் சிறப்பான முறையில் வழங்கியுள்ளது இன்றும் கூட இலங்கையில் இயங்கிவருகின்றது.

இன்றும் கூட பலஸ்தினப் போர் உக்ரேன் போர் மற்றும் யுத்தம் நடைபெறுகின்ற இடங்களிலேல்லாம் I.C.R.C தனது பணியினை செம்மையாகச் செய்துகொண்டிருக்கின்றது. மனித வரலாற்றில் பிறருக்கு உதவி செய்தல் தமது சேவை என்று தொண்டாற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி மென்மேலும் வளரட்டும் அத்துடன் இணைந்து நாமும் சாதி மதம் இன மொழி கடந்து எவ்விதபேதம் இன்றி I.C.R.C யின் பணியுடன் நாமும் இணைவோம்

# உலக புகையிலை ஒழிப்பு தினம்

உலகளாவிய புகையிலை எதிர்ப்பு தினம் வருடம் தோறும் மே மாதம் 31ம் திகதி கொண்டாடப்படுகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் அந்நாளை 1987ம் ஆண்டு சிறப்பு நாளாக அறிவித்தது. உலக சுகாதார ஸ்தாபனத்தால் கடந்த 2003ம் ஆண்டு புகையிலை தடுப்பு தொடர்பான சர்வதேச ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. 2003ம் ஆண்டு இலங்கையும் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. 2024ல் புகையிலை எதிர்ப்பு தினத்தின் கருப்பொருளாக புகையிலை தொழில் குறுக்கீட்டில் இருந்து குழந்தைகளைப் பாதுகாப்போம் என்பதாகும்.

புகைத்தல் பழக்கத்தை இளமையிலே பழக்கப்படுத்திக் கொள்கிறார்கள். அதற்கு சமூகக் காரணிகளே காரணமாகின்றது. குடும்ப உறுப்பினர்களை, உறவினர்களை, நண்பர்களை பார்த்து இப்பழக்கத்திற்கு அடிமையாகின்றார்கள். மனஅழுத்தத்தைப் போக்க, மனமகிழ்விற்காக, தற்காலிக பொழுது போக்கிற்கு இவர்கள் புகைக்கின்றார்கள். தொடர்ந்து அப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் எளிதில் அப்பழக்கத்திலிருந்து வெளியே வரமுடியாது. புகையிலையில் இருக்கின்ற நிகோடின் என்கின்ற வேதிப்பொருள் மூளைக்கு சென்று துரிதமாக உடலை தாக்கப்படுத்தும்.

புகையிலையை உபயோகிப்பதால் வாய், தொண்டை, நுரையீரல், மூச்சுக்குழாய், உணவுக்குழாய், சிறுநீர்ப்பை, சிறுநீரகம், கணையம், கர்ப்பப்பை உள்ளிட்ட உறுப்புக்களில் புற்று நோயை ஏற்படுத்தும். அதுமட்டுமன்றி சுவாசக்கோளாறுகள், இதய நோய்களும் ஏற்படும்.



திருமதி அஸ்மிதா பேகம்
விசேடநெறி ஆசிரிய மாணவி
(2022/2023)

புகைத்தலை ஏன் நாம் கைவிடவேண்டும் என்று நோக்கினால் நமக்காக, நம்மை சுற்றியுள்ளவர்களுக்காக பொருளாதார உயர்வுக்காகக் கைவிட வேண்டும்.

யாருமே தமது சொந்தக்காசில் புகைத்தலை மேற்கொண்டிருக்க மாட்டார்கள். தமது நண்பனின் வேண்டுகோளிற்கு இணங்க வாங்கிக் கொடுத்து மூச்சுத்திணறி

கஷ்டப்பட்டு அப்பழக்கத்திற்கு ஆளாகின்றது போல் அதிலிருந்து விடுபடவும் சிரமமாக இருக்கும். தொடர்ந்து புகைத்தலுக்கு பழக்கப்பட்ட ஒருவரால் புகைக்காமல் இருக்கும் போது தூக்கமின்மை, பசி, தாகம், கோபம், பதட்டம் போன்ற எல்லா நிலைமைகளும் ஏற்படும்.

இந்தப் புகையிலையைப் பயன்படுத்தி புகைப்பிடிக்கும் பழக்கம் தனி ஒருவருக்கு மட்டும் ஆபத்தானதல்ல. இந்தப் புகைக்கு ஆளாகும் ஒவ்வொருவரும் ஆபத்தான நிலையிலே உள்ளனர். இது போன்ற பழக்கங்கள் உங்களுக்கும் உங்கள் சுற்றுச் சூழலுக்கும் ஆபத்தை ஏற்படுத்தும். புகையிலை மற்றும் புகைத்தலை எதிர்ப்போம் சுற்றுச் சூழலையும் எதிர்காலத்தையும் பாதுகாப்போம்

**பயிர் வளர்ப்போம்,**
**புகையிலையை தடுப்போம்**

இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகமன்றத்தினால் 01.06.2024 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது